விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 12 ரபி - ஆகி 4 இதழ் 313
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-12-84

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
PERIODICALS DIVISION

## பிரிகேடியரை தாய்மார் நேற்று சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்ட இளைஞர்களின் தாய்மார் சிலர், நேற்று பிரிகேடியர் நளின் செனிவிரத்னவைச் சந்தித்து தங்கள் பிள்ளைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு உருக்கமான கோரிக்கைவிடுத்தனர்.

பிரிகேடியரைச் சந்தித்த பத்துத் தாய்மார்களுடன், யாழ். பிரஜைகள் குழுச்செயலாளர் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம், உப தலைவர் வண. மைக்கல் சுவாமி, மற்றும் திருமதி அருணாசலம் திருமதி சண்முகலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. கோபாலரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முகாமில் தடுத்துவைத்திருப்போர் குறித்து விசாரணை நடைபெறுகிறதென்றும் நிரபராதி என்று காணப்பட்டால் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பிரிகேடியர் தெரிவித்தார்.

## வாகனங்கள் சோதனை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிரதான வீதியில், சென். சாள்ஸ் மகாவித்தியாலயச் சுற்றுடலில்வைத்து இராணுவத்தினரால் வாகனங்கள் மறித்து சோதனையிடப்பட்டன.

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## சர்வகட்சி மாநாடு ஆலோசனை

# கைவிடப்பட்டது!

(கொழும்பு)

**சர்வகட்சி மாநாட்டுப் பிரேரணைகளை முற்றும் முழுதாகக் கைவிடுவதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.**

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''சர்வகட்சி மாநாட்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் குறித்து அமைச்சரவை கடந்தவாரமும் ஆராய்ந்தது. இன்றும் ஆராய்ந்தது மாநாட்டில் கலந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இம் மாநாட்டு ஆலோசனைகளில் நம்பிக்கை வைக்காமல் இதனை அமுல்படுத்துவதில் எந்தவிதப் பயனும் இல்லை என்று அறிக்கைவிட்டுள்ளது. இந்த நிலையில், ஆலோசனைகளை அமுல் செய்வதில் எவ்வித நன்மையும் ஏற்படாது என்று கருதிய அமைச்சரவை; மகாநாட்டு ஆலோசனைகளை அமுல் செய்வதில்லை என்றுதீர்மானித்துள்ளது'' என்று அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

### மாநாடு நடக்காது

சர்வகட்சி மாநாடு இனிமேல் கூட்டப்படமாட்டாது என்றும், ஆனால் இனப்பிரச்னையைத்தீர்ப்பதற்கான யோசனைகள், கட்சிகளிடமிருந்து வரவேற்கப்படும் என்றும் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறினர்.

## கடத்தப்பட்ட இன்ஸ்பெக்டர்கள்

# காலக்கெடு முடிவு

(யாழ்ப்பாணம்)

**பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவரையும் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தியவர்களின் காலக்கெடு, நேற்றிரவு முடிவடைந்தபோதிலும்; இச் செய்தி அச்சுக்குப்போகும்வரை, பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் நிலைமைபற்றி எவ்விதத் தகவலும் வெளியிடப்படவில்லை.**

கடத்தப்பட்ட இரண்டுபொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்குமாறு யாழ் ஆயர். வ. தியோகுப்பிள்ளை, யாழ், பிரஜைகள் குழுவினர், பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் ஆகியோர் நேற்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இருபொலிஸ் இன்ஸ்பெக்டர் தொடர்பாக தீவிரவாத இயக்கம் ஒன்று அனுப்பிவைத்துள்ள கடிதம் குறித்து யாழ. ஆயர் இல்லத்தில் நேற்று நண்பகல் நடந்த உயர் மகாநாட்டில்ஆராயப்பட்டது.

இம்மகாநாட்டில் யாழ். ஆயர். வண தியோகுப்பிள்ளை' பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான திரு. எஸ். எஸ். யோசேப், திரு. ஆர். சுந்தரலிங்கம், வடமாநிலப் பிரதிப் பொலிஸ் அதிபர் திரு டிரல் குணதிலக, இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு நளின் செனிவரத்தின, யாழ் அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம் மேலதிக அரச அதிபர்சள் திரு எஸ், பி பாலசிங்கம், திரு.கே கோபாலரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். அரசாங்க அதிபரிடம் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட இருபொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சம்பந்தப்பட்ட 'வீடியோ கசட்', கடிதம் ஆகியவை பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுந்தரலிங்கத்துக்கு விலாசமிடப்பட்டு கையளிக்கப்பட்டிருந்தது.

அக்கடிதமும், வீடியோ கசட்டும்உடனடியாகக்ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து மேற்குறிப்பிட்ட மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இம்மகாநாட்டின் பின்னர் யாழ் ஆயரால் பின்வரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### ஆயர் விடுத்த அறிக்கை

''26-12-84 ஆகிய இன்று

(6-ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

## 'இன்ரசிற்றி'யில் வந்த சட்டத்தரணி கைது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் புறப்பட்ட 'இன்ரசிற்றி'யில் பயணம்செய்த தமிழ் சட்டத்தரணி ஒருவர். அநுராதபுரம் ரயில் நிலையத்தில்வைத்துகைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## தொழில் அமைச்சர் காலமானர்

(கொழும்பு)

தொழில் அமைச்சர் காப்டன் சி. பி. ஜே செனிவரத்ன நேற்று காலமானர், அவருக்கு வயது 66.

மகியங்கனை எம். பி.யாகத் தெரிவுசெய்யப்பட்ட காப்டன் செனிரைத்ன, நான்கு

(6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

## ஆசிரியர்பதவி நேர்முகப்பரீட்சை

கொழும்பு]

கொழும்பில் இப்பொழுது நடைபெறும் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் ஜனவரி மாதம் முதல் வாரத்தில்

[6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

## 12 தீவிரவாதிகள் பலி!

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணிக்கு அருகில் பன்னிரண்டு தீவிரவாதிகள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக நேற்று அரசு அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

ஒருடிராக்டரில் பன்னிரண்டு தீவிரவாதிகளும் வந்துகொண்டிருந்தபோது, இராணுவத்தினர் அவர்கள்மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் எட்டுப்பேர் ஸ்தலத்தில் பலியானதாகவும் பின்னர் நால்வரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் பெருமளவு ஆயுதங்கள் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம்நெடுங்கேணிக்கு தென்கிழக்குப் பகுதியில் நடந்தது.

## முள்ளிக்குளத்தில் பலியானேர் விபரம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளிக்குளம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு;

சூசையப்பு குரூஸ் [40 வயது] பதிரியப்பு யோன்சன் 20 வயது], பதிரியப்பு ராஜகுரூஸ் [18 வயது], ஆசீர்வாதர் டெலாய் உஞ்ஞன் [28 வயது], சந்தியா ஜெகநாதன் செபல் [31 வயது], செபஸ்தியான் கிரிஷாந்து செபல் [58 வயது] ஆகியோரே கொல்லப்பட்டவர்களாகும்.

சம்பவதினம் அதிகாலை முள்ளிக்குளம் பகுதிக்கு வந்த 30

(6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரி வளவில் ரூ.150 லட்சம் செலவில் நான்கு மாடிக் கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வளவில் 150 லட்சம் ரூபா செலவில் நான்கு மாடிக்கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 8ம் திகதி வெளிவந்துள்ள வர்த்தமானியில் கட்டிடத்துக்கான கேள்விப்பத்திர முடிவு திகதி 16 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியினது அபிவிருத்தி கருதி கட்டிட ஒப்பந்தக்காரர்கள் அதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி யாழ்.ஆஸ்பத்திரி நலன்விரும்பிகள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த 82 டிசம்பரில் யாழ். ஆஸ்பத்திரி வளவில் நான்கு மாடிக்கட்டிடம் கட்டுவதற்கென, அப்பொழுதிருந்த யாழ், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா சமயாசார முறைப்படி அடிக்கல் நாட்டி வைத்தார். கட்டிடம் கட்டுவதற்கென அபிவிருத்தி சபையிலிருந்து திரு.நடராசா நிதி ஒதுக்கீடும் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(மா)

## இரவில்கேட்ட முழக்கங்கள்!

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு சுமார் எட்டரை மணியளவில் இடியோசை போன்று தொடர்ச்சியான சில 'முழக்கங்கள்' யாழ்ப்பாண மக்களை பேரதிர்ச்சிக்குள்ளாக்கின.

'ஈழநாடு' அலுவலகத்துக்கு நேற்றிரவு யாழ்ப்பாணத்தின் நாலாபக்கங்கலிருந்தும்தொலைபேசி அழைப்புகள் கேள்விக் [illegible] இவற்றுக்கு உடனடியாக விடைகாண முடியவில்லை.

## தமிழ்நாட்டில் 73.29 சத வீத வாக்குகள் பதிவாகின

### ஒரு வாக்களிப்பு நிலையத்தில் 92 சதவீத வாக்கு பதிவு

(சென்னை)

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் நாட்டில் 73 29 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

தமிழ் நாடடிலுள்ள மூன்று கோடியே ஏழு லட்சம் வாக்காளர்களில், இரண்டு கோடி இருபத்து ஐந்து லட்சம் வாக்காளர்களின் வாக்குகள் பதிவாகியுள்ளன.

இவர்களில் ஒரு கோடியே பதினைந்து லட்சத்து

(6-ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

புதிதாக றீபோறிங், டிங்கறிங், பெயின்றிங் செய்யப்பட்ட மொறிஸ் மைனர் யோசப், மிருக-வைத்தியர், யாழ்ப்பாணம். 1099

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் சகல வசதிகளுடன் வீடு ஒன்று இரண்டரை நிலப்பரப்பு விற்பனைக்குண்டு, தொடர்பு: 1A, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (1092)

ஒரே நாளில்

# இரு கிளைகளில் கொள்ளை!

(மாவிட்டபுரம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரு கிளைகளில் ஒரே நாளில் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் காங்கேசன்துறையில் உள்ள கிளையில் இரு இளைஞர்கள் ஆயுத முனையில் 1090 ரூபா 30 சதத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

அதே நாள் சுன்னாகத்தில் உள்ள மேற்படி சங்கக் கிளையிலும் ஆயுதமுனையில் 250 ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

மேற்படி கொள்ளைகள் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் இயங்கும் காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் இயங்கும் காங்கேசன்துறைப் பொலிசார் இது குறித்து விசாரணை செய்துவருகிறார்கள்.

# கார் கொள்ளை

[மாவிட்டபுரம்]

ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் தம் காரை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக ஒருவர் பொலிசில் புகார் செய்துள்ளார்,

மாதகலைச் சேர்ந்த ஒருவர் தம் வீட்டில் இருந்து தமது சோமசெட் காரை வாலிபர் சிலர் கொள்ளையிட்டுள்ளதாக யாழ். பொலிசில் இயங்கும் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

# மன்னாரில் துப்பாக்கிகள் மோட்டார்சைக்கிள் கொள்ளை

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் உள்ள மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தில் இரண்டு துப்பாக்கிகளும், ஒரு மோட்டார் சைக்கிளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கி சகிதம் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குச் சென்ற பத்து இளைஞர்கள் கூட்டுத் தாபன உதவி சுப்பிரிண்டனைப் பயமுறுத்தி துப்பாக்கிகளையும், மோட்டார் சைகிளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 29 லிகிதர்கள் இடமாற்றம்

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் யாழ். செயலகம், உதவி அரச அதிபர் அலுவலகங்களில் கடமையாற்றும் அரசாங்க லிகிதர் சேவையைச் சேர்ந்த 29 லிகிதர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## வவனியா பொலிசார் தென்பகுதிக்கு இடமாற்றம்

(வவனியா)

வவனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 12 பொலிசார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதிக்கே குறித்த 12 பேருக்கும் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985

**மீட்டல் வகுப்புகள்**

3-12-84ல் ஆரம்பமாகும் என்று பிற்போடப்பட்ட வகுப்புகள் 2-1-85ல் ஆரம்பமாகின்றன.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,

தொலைபேசி எண்; 22617

376, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(1043)

## வீதி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பண்டத்தரிப்பு வீதி' பண்டத்தரிப்பு-கீரிமலை வீதி ஆகிய பல முக்கிய வீதிகள் பொது மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சீர் கெட்ட நிலையில் காணப்படுகின்றன. அண்மையில் பெய்த பெரு மழையை அடுத்து இவ் வீதிகள் யாவும் பாரிய குண்டும் குழியுமாக மக்கள் போக்குவரத்திற்கு உதவாதவையாக இருந்து வருகின்றன.

## மட்டுவில் வாலிபர் சிறையில்

(கொழும்புத்துறை)

பாஸ் போர்ட் எடுப்பதற்காகக் கொழும்பிற்குச் சென்ற மட்டுவில் வாலிபர் வென்னப்புவச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இராசையா தங்கவேலாயுதம் (வயது 33) என்னும் வாலிபரே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவர். இவர் பஸ் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது நீர்கொழும்பில் வைத்துக் கடந்த 20-ம் திகதி பொலிஸாரினால் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டாராம்.

தற்போது இவர் வென்னப்புவச் சிறைச்சாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31 எழுதுவினைஞர் யாழ். மாவட்டம் இடமாற்றம்

[கொழும்புத்துறை]

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 1ம் திகதிமுதல் வெளி மாவட்டங்களிலிருந்து அரசாங்க எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த 31 எழுதுவினைஞர்கள் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம்பெற்று வரவுள்ளனர்.

கொழும்பு, நுவரெலியா, புத்தளம், வவனியா, மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்து இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்திற்குள் முப்பது எழுதுவினைஞர்கள் எதிர்வரும் ஜனவரி 1ம் திகதி தொடக்கம் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பிறந்ததின வாழ்த்து

செல்வன் நா. கிருஷ்ணமோகன்

யாழ்ப்பாணம் வண்ணை கதிரேசன் கோவில் பிரதம குரு கி. நாராயணக் குருக்கள், கல்பனு கௌரி தம்பதிகளின் ஏக புத்திரன்

செல்வன் கிருஷ்ணமோகன்

தனது முதலாவது பிறந்ததினத்தை (27-12-1984) யாழ். வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலில் கொண்டாடுகிறார்.

அவரை வாழ்த்துவோர்;-

பாட்டி, கீரிமலையில் இருக்கும் தாத்தா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார் அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார்ஆகியோர் யாழ். கதிரேசன்கோவில் முருகன் கிருபையால் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள். (1097)

## சிமெந்து விநியோகம் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

நீண்ட இடை வெளிக்குப் பின் கடந்த திங்கள் முதல் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இருந்து சிமெந்து வினியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது'

கடந்த சில வாரங்களாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைகளில் இருந்து சீமெந்து விற்பனை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தது.

இதனால் சீமெந்தின் விலை 100ரூபாவில் இருந்து 125வரை தனியாரால் விற்பனை செய்யப்பட்டுவந்தது.

மீண்டும் திங்கட்கிழமை முதல் சிமெந்து வினியோம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் சிமெந்துக் தட்டுப்பாடோ விலை கூடுதலாக கொடுத்து வாங்க வேண்டும் என்ற நிலையோ இருக்காது என தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை ஏஜென்ற்ஸ் தேவை

கீழ்க்காணும் பகுதிகளுக்கு எமது பத்திரிகை விற்பனை செய்வதற்கு

**டிப்பொசிற் கட்டக்கூடிய**

ஏஜென்ற்ஸ் உடனடியாகத் தேவை.

கைதடி — அல்வாய்—கோப்பாய் — கோண்டாவில் — கொக்குவில் — தாவடி — சுன்னாகம்

பொதுமுகாமையாளர்,

ஈழநாடு

ஓராண்டு நினைவஞ்சலி

ஐயாத்துரை சங்கரசிவம்பிள்ளை

உரிமையாளர், யாழ்ப்பாணம் றேடிங் கொம்பனி

79, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்



அன்புடனும் பாசத்துடனும் எம்மையெல்லாம் சிறப்பாய் வாழ வைத்த பாசமிகு தந்தையார், நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் உள்ளத்தில் தெய்வமாக இருந்து எம்மைக் காத்து நல்வழி காட்ட பிரார்த்திக்கின்றோம்.

அன்புமிகு

மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள், சகோதரர்கள், உறவினர்கள், மருமக்கள்.

''கலாபவனம்'',

தாவடி தெற்கு, கொக்குவில்.

27-12-1984 (1098)

## சாமாதான சபையின் சாதனை

[கொழும்புத்துறை]

பத்தமேனி-இடைக்காடு பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழுச் சமாதான சபை கூடுதலான வழக்குகளை சமரசமாகத் தீர்த்து வைத்துச் சாதனை புரிந்துள்ளது.

இவ்வருடம் இச் சமாதான சபையில் கிராம மக்களினால் முறைப்பாடு செய்யப்பட்ட 266 வழக்குகளில், இதுவரை 248 வழக்குகள் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டு இருதரப்பினரும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பதினெட்டு வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

திரு எஸ். செல்லையா இச் சமாதான சபையின் தலைவராகவும் திரு. க. பொ. ஆறுமுகம் செயலாளராகவும் சேவையாற்றுகின்றனர் பத்தமேனி இரத்திரினேஸ்வரி வித்தியாலயத்தில் சமாதானசபையின் [illegible] பெற்று வருகின்றன.

உ

சிவமயம்

அந்தியேட்டியும் வீட்டுக்கிரியை அழைப்பும்

தோற்றம்:
21-11-1912

மறைவு:
28-11-1984



திரு. M. E. நடராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

25-11-84ல் இறைவனடிஎய்திய திரு. M.E. நடராசா அவர்களின் ஆத்மசாந்திக்குரியஅந்தியேட்டிக்கிரியைகள் 27-12-84 வியாழக்கிழமை காலை கீரிமலையிலும், 28-12-84 வெள்ளிக்கிழமை வீட்டுக்கிரியை அன்னாரது இல. 184 நாவலர் வீதி இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவரையும் இவ்வைபவத்தில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

(1000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் நாடு சட்டப்பேரவை, லோக் சபைத் தேர்தல்:

# பெரும்பாலான முடிவுகள் நாளை வெளிவரும்

(சென்னை)

தமிழ்நாட்டின் 232 சட்டப் போவைத் தொகுதிகளில் 200 தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் நாளை வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குள் வெளிவந்துவிடுமென தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. டி. கே. ஒஸா தெரிவித்துத்துள்ளார்.

தமிழ்நாட்டின் அதிகமான லோகசபைத் தொகுதிகளின் முடிவுகளும் நாளை நள்ளிரவுக்குள் வெளிவருமென அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் வாக்குகளை எண்ணும் வேலைகள் நாளைக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வாக்குப்பெட்டிகள் சீல்வைக்கப்பட்டு வாக்குகளை எண்ணும் நிலையங்களுக்கு போய்ச் சேர்ந்துள்ளன. இந்த வாக்குப்பெட்டிகளை ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் புரிந்துவருகின்றனர்.

### தேர்தல் முடிவுகள்

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் நாளை மாலை 4 மணிக்குப் பின்னர் வெளிவருமென்றும் தெரிவிக்கப்பட்டது

சென்னை வானொலி நிலையம் உடனுக்குடன் தேர்தல் முடிவுகளை ஒலிபரப்பவுள்ளது. நாளையும், நாளைமறுதினமும் சென்னை வானொலி நிலையம் சிறப்புத் தேர்தல் அறிக்கையை மணிக்கொரு தடவை ஒலிபரப்பும்.

## இருபாலையில் 500 பேர் பாடசாலைகளில் தஞ்சம்!

[சுண்டுக்குழி]

கடந்த ஞாயிறு இருபாலையில் நடந்த இராணுவத் தாக்குதலின்போது, பாதுகாப்புத்தேடி வீடுகளிலிருந்து தப்பிஓடி இருபாலை சி. சி. டி. எம். எஸ். பாடசாலையில் 500 க்கும் மேற்பட்டோர் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான உணவு வசதிகளை மக்கள் பாதுகாப்புக்குழு, அதன் தலைவர் ஆசிரியர் சபாரத்தினம் தலைமையில் செய்து கொடுக்கிறது. சுவிஸ் நாட்டினைச் சேர்ந்த பத்திரிகை நிருபரும், நலன்புரி குழுவும் நேரில்வந்து இந்த அகதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

சுவிஸ் பிரதிநிதியும், இக்குழுவினரும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு சேத விபரங்களைத் திரட்டியுள்ளனர். 'றெட்பாஞ' போன்ற பொது ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டு உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முதல்வர் எம். ஜி. ஆர். உடல் நிலை தேறுகிறது

சென்னை, டிச. 26

இம்மாதம் 19ம் திகதி நியூயோர்க் புறூக்ளின் மருத்துவமனையில் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைக்குள்ளான தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை தேறி வருவதாக அறிவிக்கப்பட்டது.

திரு. ராமச்சந்திரன் சுறுசுறுப்பாகவிருப்பதாகவும், அவரது அறைக்குள் சிறிதுதூரம் நடந்ததாகவும், தேர்தல் நிலவரம் பற்றி விசாரித்ததாகவும் கூறப்பட்டது.

## சுழிபுரம் மீனவர் நாளாந்த உணவிற்கு கஷ்டப்படுகின்றனர்

[சுழிபுரம்]

சுழிபுரம் மீனவர்கள் வேலை வாய்ப்பு இல்லாததால் தமது நாளாந்த உணவுக்காக தங்கள் வசமிருந்த சில பெறுமதியான பொருட்களை விற்பனைசெய்து உணவு வகைகளைத் தேடுகின்றனர்.

கடலில் தொழில் செய்ய முடியவில்லை. எமது பசிக்கு வீட்டில் உணவில்லை. நாம் எங்கேபோவது என்று தெரியாது மீனவர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் தங்கள்மேல் கருணை காட்டுமாறு அரச அதிகாரிகளை வேண்டியுள்ளனர். இவர்கள் தமது நேரத்தை வீதிகளிலும் திண்ணைகளிலும் போக்குகின்றனர்.

## பாகிஸ்தான் ஜனதிபதியின் கோரிக்கை

இஸ்லாமாபாத், டிச. 26

பாகிஸ்தானை இஸ்லாமியமயமாக்கும் தமது முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் தமது நாட்டு எதிர்க்கட்சிகளைக் கேட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்றும் ஜனதிபதி ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற கருத்துக் கணிப்பிற்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்க்கட்சிகள் அங்கு ஊர்வலமொன்றை நடத்தியது.

## யாழ். ஆஸ்பத்திரி புதிய அமைச்சின் கீழ்

(பண்டத்தரிப்பு)

இது வரை காலமும் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கிவந்த யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் போதனு வைத்தியசாலைகள் அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது. இதன் பொருட்டு யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் ஐந்து எழுதுவினைஞர்கள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## விசாரணைக்கு அழைத்து சென்றனர்

[சுழிபுரம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி லீயோக் கழகத் தலைவர் கே. இந்திரராசா விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பகுதியை முற்றுகையிட்ட இராணுவத்தினர் சுழிபுரம் பத்திரகாளி கோவிலிக்கு அருகாமையிலுள்ள இவரது இல்லத்திலிருந்தே இவரை அழைத்துச் சென்றனர்.

இவரை விடுவிக்கும் முயற்சியில் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணசலம் வட்டுக்கோட்டையன் கழகத்தினர் ஆகியோர் மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளனர்.

## துப்பாக்கி முனையில் மீண்டும் கொள்ளை!

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை, சாவகச்சேரித் தொகுதிகளுக்கான குழாய்நீர் விநியோகத்திட்ட வேலைகளை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவனமான சமக்கோன் கம்பனியின் லொறி துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டு மீண்டும் கொள்ளைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சில துப்பாக்கி இளைஞர்களால் பெறுமதி வாய்ந்த உபகரணங்கள், பொருட்களை ஏற்றியபடி நின்றிருந்த சமக்கோன் கம்பனிக்குச் சொந்தமான லொறி கடத்திச் செல்லப்பட்டிருந்தது. கடத்தப்பட்ட லொறியில் இரண்டு லட்சத்துப் பதின்மூன்றுயிரம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள், மோட்டார் பம்புகள் சமப்படுத்தல் அளவு, கருவிகள், ரியூப்லைற், மின்விசிறிகள், மழைக்கோட்டுகள் மற்றும் கருவிகள் போன்றவை ஏற்றப்பட்டிருந்தன.

லொறியைக் கடத்திச் சென்றவர்கள் உபகரணங்களையும் பொருட்களையும் அபகரித்தபின்னர் லொறியை யாழ். ஆஸ்பத்திரிக்குப் பின்னால் விக்ரோறியா வீதியில் அனுதரவான நிலையில் விட்டுச் சென்றிருந்தனர். கடந்த திங்கட்கிழமை காலை இந்த லொறி சமக்கோன் நிறுவனத்தினரால் மீட்கப்பட்டது.

சமக்கோன் நிறுவனத்தில் இடம்பெற்ற 5-வது கொள்ளைச் சம்பவம் இதுவாகும்.

## ஓய்வூதியக்கிளை குமஸ்தாவின் சேவைக்கு பாராட்டு

(கொழும்புத்துறை)

யாழ். செயலக ஓய்வூதியக் கிளையின் தலைமைக் குமாஸ்தாவான திரு. ஆர். தேவராஜாவின் சேவை மனப்பான்மைக்கு ஓய்வூதியம் பெறுவோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் கச்சேரி-நல்லூர் வீதியில் நடைபெற்ற இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தின் போது இவர் கையில் சூட்டுக்குள்ளாகி விரல்கள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் ஓய்வூதியம் பெறுபவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஊரடங்கு நேரங்களின் போது அலுவலகங்கள் முழுநேர வேலையின்றியிருந்த போதிலும் துரிதமாக வேலைசெய்து இம்மாத ஓய்வூதியத்தை அதிக தாமதமின்றிக் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமைக்காக அவர் எல்லோரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

## இருபாலையில் பாதுகாப்பு குழு

[சுண்டுக்குழி]

இருபாலைக் கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பாதுகாப்பு நலன்களை முன்னிட்டு, மக்கள் பாதுகாப்புக்குழு ஒன்று அங்கு ராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தலைவராக ஆசிரியர் திரு. எஸ். சபாரத்தினமும், துணைத்தலைவர்களாக அழகரத்தினம், குலசிங்கம் ஆகியோரும் இணைச்செயலாளராக திருவாளர்கள் போல் சண்முகம், குமாரசிங்கம் ஆகியோரும், பொருளாளராக க. வீரவாகுவும் இன்னும் 15 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இது யாழ். பிரஜைகள் பாதுகாப்புக்குழுச் சம்மேளனத்துடனும் இன்னும், இதுபோன்ற மனித உரிமை மக்கள் நலன்புரி நிறுவனங்களுடனும் தேவையான போது இணைந்து இயங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## இலவச மரக்கன்றுகள்

[யாழ்ப்பாணம்]

பயன்தரும் மரக்கன்றுகளை தொழிலதிபர் திரு. க. கனகராசா இலவசமாக இப்பொழுது வழங்கிவருகிறுர்.

வருங்கால சமுதாயத்தின் நன்மைகருதி, பயன்தரும் மரக்கன்றுகளை தமது தொழிலகத்திலே உருவாக்கி தேவையானேருக்கு அவர் கொடுத்து உதவுகிறுர்.

அண்மைக்காலங்களில் கரவெட்டி ராஜகிராமத்துக்குச் சென்ற திரு. கனகராசா பலவிதமான மரக்கன்றுகளை ஒவ்வொரு வீடுகளுக்கும் ளழங்கினுர்.

அப்பகுதியில் படிக்கும் வசதியற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி எழுதுகொப்பிகள், அரிச்சுவடிகள், அறிவுள்ள புத்தகங்களையும் வழங்கினுர்.

தமது தொழிலகத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பொதுமக்கள் வாங்கினுல் பயன்தரும் அறிவு நூல்களும் மரக்கன்றுகள் ஏழைமக்களுக்கான உதவிகளும் தொடர்ந்து வழங்கமுடியும் என்று திரு. க. கனகராசா தெரிவித்துள்ளார்.

(ம)

## "அப்பாவி தமிழ் மக்களை கைதுசெய்வதை நிறுத்தவும்"

### சண்டிலிப்பாய் பிரஜைகள் குழு தீர்மானம்

[மானிப்பாய்]

சண்டிலிப்பாய் பிரஜைகள் குழு நிர்வாக சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

''இலங்கை போக்குவரத்துச் சேவையும், தனியார் பஸ் சேவையும் நடைபெற்ற காலத்திலேயே யாழ். மாவட்ட மக்கள் பிரயாணத்தில் பெரும் கஷ்டங்களை அனுபவித்தனர். அரசின் தற்போதைய நடைமுறையால் தனியார் பஸ் சேவை தடை செய்யப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து பஸ் சேவை இருக்கின்றதா இல்லையா என்ற நிலை. இந்நிலையில் யாழ்ப்பாண மக்கள் பிரயாணத்தில் சொல்லொணுத் துயர்களை அடைகின்றனர். மக்களின் பிரயாணத்திற்கு வசதி செய்யும்பொருட்டுத் தனியார் பஸ் சேவையை நடாத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

''யாழ். மாவட்டத்தில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாட்டினுல் இவ்வருடத்திற்கான பயிர்ச் செய்கையை விவசாயிகள் மேற்கொள்ள முடியாது அல்லற்படுகின்றனர். இதனுல் உப உணவு உற்பத்தி [illegible] போகின்றது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு சீரான முறையில் மண்ணெண்ணெய் விநியோகம்செய்ய அரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

''அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் எதுவித காரணமுமின்றி வீடுகளிலும், கண்ட கண்ட இடங்களிலும் கைதுசெய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் உடனடியாக நிறுத்தப்பட அரசு ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும்.

''பல நாள் மயான அமைதிக்குப் பின்னர் யாழ். நகர் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் கடந்த 19ம் திகதி ஆயுதப் படையினரால்யாழ். நகர்சுற்றி வளைக்கப்பட்டு இரண்டாயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் கைதுசெய்யப்பட்டமையை இச்சபை வன்மையாகக் கண்டிப்பதோடு, இனி மேலும் இவ்வித நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளக் கூடாது என்று மிகவும் பரிந்துணர்வுடன் கேட்டுக்கொள்கின்றது.

## நுழைவு பத்திரம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் நுழைவுப் பத்திரத்தைப் பெற்றுச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இனி ஆரம்ப பாடசாலை ஆசிரியர்

(திருக்கோணமலை)

பாலர் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இனிமேல் 'ஆரம்பபாடசாலை ஆசிரியர்' என்றே அழைக்கப்படுவர்.

இதுவரை காலமும் பாலர் பாடசாலை ஆசிரியர் என்றே அழைக்கப்பட்டுவந்தனர்.

இப்பெயர் மாற்றம் பற்றி உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், மாவட்ட அபிவிருத்திச் சபைகள், மாநகர, நகரசபைகள் அனைத்திற்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினிச்சாவுக்கே அழைத்துச்செல்கிறது!

[பண்டத்தரிப்பு]

''கடல் கண்காணிப்பு வலயத்தினுல் ஏற்கனவே பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள கடற்ருெழிலாளர்களுக்கு கடலிலிருந்து நூறு மீட்டர் தூரத்திற்கு நடமாட வேண்டாம் என்று தடை விதிப்பது அவர்களை பட்டினிச் சாவுக்கே இட்டுச் செல்வதாக உள்ளது. இப் பகுதி ஏழைக்கடற்ருெழிலாளர்கள் உணவுக்கு வழியின்றி பட்டினியால் இறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை தங்கள் கவனத்திற்கும், உடன் நடவடிக்கைக்கும் சமர்ப்பிக்கின்ருேம்.''

இவ்வாறு மாதகல் கடற்ருெழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கம் ஜனுதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது. மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. வி. அருந்தவத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரின் பிரதிகள் கடற்ருெழில் அமைச்சர், யாழ். பிரஜைகள் குழு ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கொலையெனத் தீர்ப்பு

(வவனியா)

வவனியா கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள செல்வச் சந்நதி அரிசி ஆலை முதலாளி கதிரவேல் மயில்வாகனம் வெட்டிக்கொலை செய்யப்பட்டது தொடர்பான மரண விசாரணையை வவனியா பதில் நீதிவான் திரு. ஆர். வி. வில்வராஜா நடத்தி கொலை எனத் தீர்ப்பு வழங்கி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை வவனியா மாவட்டத்தில் வைத்திய அதிகாரி டாக்டர் சிறீ இராஜேஸ்வரன் மேற்கொண்டிருந்தார். சடலம் சொந்த ஊரான உடுவிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

## மின்சாரம் தாக்கி மரணம்

(பண்டத்தரிப்பு)

வானெலியில் நண்பகல் செய்தியை கேட்பதற்காக தமது வனெலிப் பெட்டியை அவசரமாக பழுது பார்க்க முற்பட்ட ஆறு பிள்ளைகளின் தந்தை மின்சாரம் தாக்கியதால் ஸ்தலத்தில் பலியான பரிதாப சம்பவம் பண்டத்தரிப்பில் நிகழ்ந்துள்ளது.

பண்டத்தரிப்பு சண்டிலிப்பாய் வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை லோறன்ஸ் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி தபால் நிலையத்தில் அறுபது சதத்திற்கு மேற்பட்ட முத்திரைகள் இல்லாததால் மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றூகள். குறிப்பாக யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வருபவர்களும் மற்றும் கடவுச் சீட்டு, மோட்டார்வாகன அனுமதிப்பத்திரம் முதலியவற்றிற்கு விண்ணப்பிப்பவர்களும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றூர்கள்.

வியாபாரப் பெயர்: டெலிபன்கன்

உற்பத்தியான நாடு: மேற்கு ஜெர்மனி

மாடல்: 5016. அளவு: 20" வர்ண டி. வி

விலை: ரூபா 13,875/-

பிரமாதம்!



இல்லந்தோறும் இருக்க வேண்டிய ஓர்புகழ் பெற்ற பெறுமதி வாய்ந்த டி.வி. அதுதான்

டெலிபன்கன்

அற்புத 'பெல்' தொலைக்காட்சி முறையை உலகிற்கு அறிமுகம் செய்த டெலிபன்கன் தயாரிப்பு

எமது நாட்டிற்கு முற்றிலும் இசைவாக்கப்பட்டது. செட்டுக்கு இரு வருட உத்தரவாதம் படக்குழாய்க்கு மூன்று வருட உத்தரவாதம்.

GARADS

TELE FUNKEN டெலிபன்கன்

இலங்கையில் விற்பனையாகும் டி.வி களில் முதற்தரம் வாய்ந்த மேற்கு ஜெர்மன் டி.வி.

காட்சியறை: 467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி:548238,93719

யாழ்ப்பாணம் - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், கே கே.எஸ். வீதி. தொலைபேசி.021-24267

கண்டி காட்சியறை: 78, இராஜ வீதி. தொலைபேசி: 08-25670

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புளட்' அறிவிப்பு

# 6 இளைஞர்கள் கொலைக்கும் எமக்கும் தொடர்பில்லை

[யாழ்ப்பாணம்]

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களின் கொலைக்கும் எமது இயக்கத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை'' என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தெரிவித்துள்ளது.

கடந்த 18ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ''மக்கள் விடுதலையா? மனித வேட்டையா? என்ற தலைப்பில் வெளிபிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தமது இயக்கத்தைச் சேர்ந்த ஆறு இளைஞர்களின் கொலையில் தாம் தொடர்பு கொண்டிருப்பதாகவும், வேறு நான்கு இளைஞர்களை ஆயுத முனையில் மிரட்டி வானில் ஏற்றி இறக்கியதாகவும் கூறப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலாகத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் 23ம் திகதி, ''நிதானத்துடன் செயல்படுவோம்'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில், ''புலிகள் இயக்கம் மேற்படி துண்டுப் பிரசுரம் வெளியிடுவதற்கு முன்னரே எமக்கு எதிராக அவதூறுப் பிரசாரங்களையும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளார்கள். இவற்றை நாம் புலிகளின் தலைவர் திரு பிரபாகரனின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம் இவர்களின் அவதூறுப் பிரசாரங்களை மேற்படி புலிகளின் துண்டுப் பிரசுரமாக வெளிவந்துள்ளது

அண்மையில் எமது செயலதிபர் உமாமகேஸ்வரன் தமிழீழம் வந்திருந்தார். நவம்பர் 24ம் திகதி அவர் தங்கியிருந்தஇடத்துக்கு அருகில் 4 புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் காணப்பட்டார்கள். இவர்களை நாம் வானில் ஏற்றி பின்னர் இறக்கி விட்டோம். அவர்களை நாம் எவ்விதத்திலும் துன்புறுத்தவில்லை. இதேபோன்று வேறு நான்கு இடங்களில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 7 பேர் உட்பிரவேசிக்க முயன்றபோது அவர்களைத் தடுத்தோம்.

சுவரொட்டி ஒட்ட வந்த ஆறு புலிகள் தோழர்களின் மரணத்துக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை என்பதினை அறுதியிட்டுக்கூறுகின்றோம். நாம் எந்த விடுதலை இயக்கபோராளிகளின்மரணத்தையும் பேரிழப்பாகக் கருதுகின்றோம். இதனால் இக்கொலைகள் குறித்து நாம் இதற்குப் பொறுப்பானவர்களைக்கண்டிக்கின்றோம்.

நாம் எல்லா இயக்கங்களும் இணைந்து போராடுவதை விரும்புகின்றோம் என்றும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'ஈழநாடு' ஊழியர் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

'ஈழநாடு' ஊழியர்ஒருவர்கடமையிலிருந்தபோதுகடந்த24ம் திகதி இரவு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்திச்செல்லப்பட்டு கட்டி வைத்து தாக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலால் ஊழியரின் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.


**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதே
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல் மினி**
10-15, 1-15
ரஜனிகாந்த்-ரேவதி
நடிக்கும்
மகேந்திரனின்
**கை கொடுக்கும் கை**

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(

இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
**பாலைவனச்சோலை**
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
**சத்தியம்**
(ஈஸ்மன் கலர்)


## 7 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடம்

[வவனியா]

ஏழு லட்சம் ரூபா செலவில் வவனியா கமநல உதவி ஆணையாளர் அலுவலகம் கட்டப்பட்டு வேலைகள்யாவும் பூர்த்தியாகியுள்ளது

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட நிதி உதவியிலேயே குறித்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வவனியா புகையிரத நிலையத்திற்கு எதிரேயே இந்த ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ளது.

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்று வரும் திருமுறை முற்றோயலின் ஓர் அம்சமாக திருவெம்பாவை மூன்றும் நாள் ஆகிய எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாலை முதல் பிற்பகல் வரை திருவாசகம் முற்றோதல் நடைபெறும்.

## ரத்துச்செய்ய கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. மு. பாலசிங்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடமாற்றத்தை ரத்து செய்துச் தருமாறு இப்பகுதியிலுள்ள பொதுநல இயக்கங்கள் மேலிடத்தை கேட்டுள்ளன.

## நத்தார் பண்டிகை சோபிக்கவில்லை

[வவனியா]

வவனியாவில் 'நத்தார்' பண்டிகை இம்முறை சோபிக்கவில்லை. சோகமயமாகவே மக்கள் காணப்பட்டனர். வீடுகளில் அலங்காரம் காணப்படவில்லை. பிரார்த்தனையிலேயே கூடுதலான வைபவங்கள் இடம்பெற்றன.

இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்றது. நகரம் அமைதியாகக் காணப்பட்டது.

## தப்பி ஓடிய கார்

(மாவிட்டபுரம்)

இராணுவத்தினர் நிறுத்தும்படி கூறியும் நிறுத்தாமல் ஓடிய கார் ஒன்றை இராணுவத்தினர் துரத்திச் சென்றனராம். ஆனால் காரில் இருந்தவர்கள் காரை விட்டு இறங்கி ஓடிவிட்டார்களாம்.

ஒருகாரும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கீரிமலைக்கு அன்மையில் போய் கொண்டிருந்த போது இராணுவத்தினர் அவற்றை நிறுததும்படி சமிங்கை செய்த போதும் அதைமீறி அவர்கள் ஓடியதாகவும் உடன் அவர்களை இராணுவத்தினர் துரத்திச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அவர்கள் காரையும் மோட்டார் சைக்கிளையும் வீட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதையடுத்து காரையும் மோட்டார் சைக்கிளையும் இராணுவத்தினர் கைப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஆடம்பரமற்ற திருவெம்பா உற்சவம்

(மாவிட்டபுரம்)

ஆடம்பரமற்ற முறையில் திருவெம்பா உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி ஆரம்பமாக விருக்கிறது.

மார்கழி மாத அதிகாலைப் பஜனைகளும் இம்முறை இடம் பெறவில்லை.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், வீமன்காமம் தலையிட்டி ஞானவைரவர் ஆலயம், தெல்லிப்பளை துர்கை அம்மன் ஆலயம் உட்பட இப்பகுதியில் உள்ள ஆலயங்களில் அமைதியானமுறையில் திருவெம்பா உற்சவம் நடைபெறவிருக்கிறது.

பெரும்பாலும் அதிகாலையில் நடைபெறும் பூசைகளும் ஊரடங்கு நேரத்தின் பின்பே நடாத்தப்படவிருக்கிறது.

## மக்களிடையே நிரந்தர அமைதியை ஏற்படுத்தியோர்

(உடுவில்)

''நாட்டில் அதர்மம் தலை தூக்கிய போது தர்மத்தை நிலை நாட்டவும் அநீதி நிலவுகின்றவேளையில் நீதியை நிலை பெறச் செய்யவும்' ஆக்கிரமிப்பு ஏற்படும் வேளைகளில் அமைதியை ஏற்படுத்தவும் காலந்தோறும் இறையருள் பெற்ற மகான்கள் தோன்றி அதர்மம், அநீதி, ஆக்கிரமிப்பு போன்றவற்றைக் களைந்து மக்களிடையே நிரந்தர அமைதியை உருவாக்கிச் சென்றுள்ளனர். இவ்வரிசையிலே புத்தபெருமான்' யேசு பிதா' மகாத்மா காந்தி, போன்றவர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.''

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த ஒளிவிழா நிகழ்ச்சியில் பேசிய பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வண பிதா கிறிஸ்தோபர் தமது உரையில் ''அன்பு, கருணை போன்ற குணங்கள் மக்களிடையே இயல்பாகவே அமைய வேண்டும், என்றும், இன்றைய சூழ்நிலையில் மக்கள் ஒருமித்து கட்டுக்கோப்புடன் இருந்து செயல்ப்படுவார்களேயானால் எம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை சுலபமாக அகற்றி விடலாம்'' என்றும் கூறினார்.

## வாகன அனுமதிப்பத்திரம்

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வாகன அனுமதிப்பத்திரங்கள் துரிதமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 21-ம் திகதி முதல் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க. சுப்பிரமணியத்தினால் கார், மினிபஸ், மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வைத்திருப்பதற்கும், பாவிப்பதற்குமான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட வாகன சொந்தக்காரர் தம் வாகனத்தின் புத்தகம்,காப்புறுதிப்பத்திரம், வரி செலுத்திய ரசீது ஆகியவற்றை சமர்ப்பித்து விண்ணப்பப்பத்திரத்தை பெற்று அதை நிரப்பி கொடுத்தால் அதற்கு ஒரு ரசீது வழங்கப் படுகிறது.

இந்த விண்ணப்பங்கள் யாவும் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டு பொலிஸ் அதிபரின் சிபார்சுடன் ஒரு வாரத்தில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது குறிப்பிட்ட பாதைகளுக்கான நிறம் அடங்கிய அனுமதி என்னும்துண்டு வாகனச் சொந்தக்காரரால் உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு இலவச உணவுப்பொருட்கள்

(வண்ணார்பண்ணை)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நெடுந்தீவில் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு பொதுமக்கள் உதவியுடன் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் சிலராலும் பொதுஸ்தாபனங்கள் சிலவற்றாலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட அரிசி உணவுப் பொருட்கள் பாதிக்கப்பட்ட வறிய டுடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

நெடுந்தீவு மேற்கு, தெற்கு, கிழக்கு வெல்லை ஆகிய பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதால் இத்துறையில் துணைத்தொழில் செய்துவந்த வறிய குடும்பங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு உதவும் வகையில், இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை இப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் திரு. என். கணபதிப்பிள்ளை, திரு. வி. நடராசா, கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்நத திரு. பி. மரியாம்பிள்ளை திரு இரத்தினம் ஆகியோர் மேக்கொண்டிருந்தனர்.

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை, நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இளைஞர் கழகம், ஆகியவற்றின் தலைவர்களும், வண. பிதா அருட்திரு தியாகராசா உட்பட மற்றும்பலரும் பொருளுதவி வழங்கினர். சுமார் 700 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழுங்கப்பட்டன. மேலும் உதவிகள் வழங்க உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

## எரிந்தநிலையில் மோட்டார் சைக்கிள்

[உடுவில்]

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்று எரிந்த நிலையில் நேற்றுக்காலையில் காணப்பட்டது.

## ஊரடங்கு மீண்டும் அமுல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கடந்த இரு தினங்களாக நீடிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணிக்கு மீண்டும் அமுல் செய்யப்பட்டது.

இவ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு தளர்த்தப்படும்.

## கிணற்றில் மூழ்கி மரணம்

[உடுவில்]

நண்பர்களுடன் வயல் கிணற்றில் நீந்தி விளையாடுவதற்கு சென்ற வாலிபர் ஒருவர் கிணற்றில் மூழ்கி மரணமடைந்த சம்பவம் ஒன்று உடுவிலில் நடைபெற்றுள்ளது.

உடுவிலில் கந்தரோடையைச் சேர்ந்த சுப்பிரமணியம் முருகானந்தன் என்னும் 22 வயது வாலிபரே இபரிதாப மரணத்துக்காளானவர் ஆவார்.

குறிப்பிட்ட தினத்தன்று தமது நண்பர்களுடன் வயல் கிணற்றில் நீந்தி விளையாடச் சென்ற இவ் வாலிபர் நீர் நிறைந்த கிணற்றின் அடியில் சென்று. சில நிமிடநேரம் வெளியே வராத நிலைகண்டு நண்பர்கள் கூக்குரலிட்டதாகவும், வயலில்நின்ற ஒருவர் ஓடிவந்து கிணற்றுக்குள் குதித்து சுழியோடி வாலிபரை மீட்டு வந்ததாகவும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

அறிவற்றம் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கலாகா அரண்.

# நமது நோக்கு

## இன்றைய தேவை

"அவை ஒரு சிறப்பான காலம் தான், அதேசமயம் மிகமோசமான காலமும்கூட; பிரகாசமான நாட்கள்தான்— இருள் சூழ்ந்த நாட்களும் கூட..''

பிரஞ்சுப் புரட்சியின் இறுதிகாலத்தை வர்ணிக்கும்போது சார்ல்ஸ் டிக்கின்ஸ் என்ற 19-ம் நூற்றுண்டு ஆங்கில ஆசிரியர் தமது ''இருநகரங்களின் கதை''யில் மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

இந்த வர்ணனை இன்றைய நமது நாட்டின் நிலைமைகளுக்கு மிகப் பொருத்தமாக இருப்பதைக் காணலாம்.

இலங்கைத் தமிழர் சரித்திரத்தில் இன்று மிகவும் இக்கட்டான, ஆனல் ஒரு திருப்பு முனைக்குரிய காலம் தோன்றியுள்ளதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

ஏதோ ஒன்று நடக்கப்போகின்றது- அது முழு சமுதாயத்தையும் அழித்துவிடப்போகின்றதா, அன்றி அழிவுக்கு மத்தியிலும் ஒளிமிக்க எதிர்காலத்தைத் தோற்றுவிக்கப் போகின்றதா என்பதை ஊகிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

வாககுபலம் என்ற மந்திரகோலையே நம்பி தனது அரசியல் வாழ்வை தீர்மானித்து வந்த பொதுமகன் இன்று செய்வதறியாது திகைத்துநிற்கின்றுன். என்றுலும், ''முற்றும் மூழ்கிவிட்டவனுக்குதலைக்குமேல் தண்ணீர் சாண் போனல் என்ன முழம் போனல் என்ன?'' என்பது போன்ற ஒருமனப்பான்மை தம்மையறியாமலே ஏற்பட்டுவருகின்றது.

நாட்டில் உருவாகியுள்ள நிலைமைகளும், அரசியல் பொருளாதார ராணுவ நடவடிக்கைகளும், தமிழ்மகன் தன்வாழ்வினை புது மாதிரியாக அமைத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன.

கடல்முற்றுகை மீனவர் வாழ்வைக்குலைத்துவிட்டது கரையோரப் பகுதிகளில் 'ஆளில்லா' பிரதேசப் பிரகடனம், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களையெல்லாம் விடுத்து புதிய இடங்களை நாடி அகதிகளாகப்புறப்படவேண்டிய சூழ்நிலை - யாரிடம் போவது, எங்கே போவது? ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகிக்கொண்டிருக்கின்றன.

எரிபொருள் தட்டுப்பாடு, வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு, முதலியவை விவசாயிகள், தொழிலாளிகளை மோசமாகப்பாதித்து வருகின்றது.

வயல்கள்,தோட்டங்களில் உழைப்பு ஸ்தம்பித்தால் உள்ளூரில் விளையும்பொருட்களை எதிர்பார்க்கமுடியாது- கொழும்புக் கப்பல் வராவிட்டால் அரிசி, மா, சீனி முதலிய பொருட்களுக்கு வேறு வழியில்லையென்ற நிலைமை.

தேசிய பந்தோபஸ்து திட்டங்களின் பெறுபேறுகள் இவை.

தமிழ்ப்பகுதிகளில் மிக விரைவாக உருவாகிவரும் இந்நிலைமை பஞ்சம், பசி, பட்டினிச் சாவுக்கு வழி வகுக்கலாம்.

சிக்கனமும், ஆடம்பரத்தைக் கைவிடலும், இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு அபயமளித்து இருப்பதைப் பகிர்ந்துகொள்ளும் மனப் பக்குவமும் நமக்கு இன்று முக்கியமாகத் தேவை.

## திடீரென வெடித்த பீரங்கி!
### பாதுகாப்பு ஊழியர் காயம்

(யாழ்ப்பாணம்)

குருநகரிலுள்ள மக்கள் வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடமையிலிருந்தபோது கவசவண்டி பீரங்கி வெடித்து காயமடைந்தார்

அச்சுவேலியைச் சேர்ந்த க. சிவஞானசுந்தரம் (54வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

நேற்றுமுன்தினம் ஒன்றரை மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

யாழ். புகையிரத நிலையத்தில் யாழ்.சேவி ரயிலுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு குருநகர் இராணுவ முகாமிலிருந்து பீரங்கி வண்டிகள் சகிதம் இராணுவத்தினர் புறப்பட்டபோது முகாமுக்கு முன்னல் உள்ள வங்கிக்கட்டிடத்தில் மக்கள் வங்கிப் பிரிவுக்குள் திடீரெனபீரங்கிவெடித்துகுண்டுகள் பாய்ந்தனவாம்

ஒரு சுற்றில் சுமார் 700குண்டுகள் பாய்ந்ததாகவும் கட்டிடத்தின் முன்பகுதி சுவர்கள் குண்டுகளால் தாக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு ஊழியர் தெய்வாதீனமாக கையில் ஏற்பட்ட காயத்துடன் உயிர் தப்பியதாகவும் கூறப்படுகிறது

தவறுதலாக அப்பீரங்கி வெடித்ததாலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாகப் பின்னர் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுக்காலை சில பணிநேரம் வங்கி ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்தபோதிலும் இராணுவ அதிகாரியின் வேண்டுகோளின் பேரில் மீண்டும் வேலைக்குத் திரும்பிவிட்டதாக வங்கிவட்டாரம் தெரிவித்தது.

காயமடைர்த பாதுகாப்பு ஊழியர் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றி பின்னர் ஓய்வுபெற்று கடந்த 9 மாத காலமாக இவ்வேலையில் இருப்பதாகவும், குண்டு தாக்கி கையில் முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இப்பீரங்கிக் குண்டுகளின் தாக்கத்தினல் ஒரு பசுவும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டுள்ளது. (மா)

## மரணவிசாரணை நடந்தது

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 55 வயதான வல்லி சின்னத்தம்பியின் மரணவிசாரணை அவசர கால சட்ட விதியின்கீழ் நடைபெற்றது.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இருபாலையில் பலியான மற்றொருவரின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சடலம் அடையாளம் காணப்படவில்லை. (க)

## கொழும்புக்கு படையெடுத்த இளைஞர், யுவதிகள்!

[வண்ணார்பண்ணை]

ஆசிரிய நியமன நேர்முகப் பரீட்சைக்கு வடபகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் படையெடுத்துச் சென்றனர்.

இப்பரீட்சைக்குச் செல்பவர்களுக்கு வதிவிட. வாக்காளர் அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதற்கு யாழ். தேர்தல்அலுவலகம் திங்கட்கிழமை மாலை 5 மணிவரை செயல்ப்பட்டது

இதேபோல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான பெர்மிட் வழங்குவதிலும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் உதவி செய்திருந்தன.

தமது பிள்ளைகளை தென்னிலங்கைக்கு அனுப்புவதற்கு பீதிகொண்ட பெற்றூர் பலர் இப்பரீட்சைக்கு தமது பிள்ளைகளை அனுப்பாது தடுத்துள்ளதாகவும், சில இளைஞர்கள் துணிந்து சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது.

இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இறுதி நேரம்வரை கைகூடவில்லை.

### ஆசிரியர்பதவி...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தம்மை வந்து சந்திக்கலாம் என்று கல்விச் சேவைக் குழு அங்கத்தவர் திரு. க. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

### தொழிலமைச்சர்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

தடவைகள் இத்தொகுதியில் எம். பி. யாகத் தேர்நதெடுக்கப்பட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையருக்கு கூடுதலாக வேலைவாய்ப்புப் பெறுவதில் அமைச்சர் அதிக அக்கறை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வாகனங்கள்...

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

அனுமதிப்பத்திரம் இல்லாமல் பிரயாணிகளை ஏற்றிவந்த வான்கள், மினிபஸ்களிலிருந்து பிரயாணிகள் இறக்கிவிடப்பட்டு, வாகனச் சாரதிகள் எச்சரிக்கைசெய்யப்பட்டு விடப்பட்டனராம். (மா)

### தமிழ்நாட்டில்...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

இருபத்து எட்டாயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு ஆண்களும் ஒரு கோடியே பத்து லட்சத்துப் பதினேழாயிரத்து எண்ணூற்று இருபத்து ஐந்து பெணகளும் வாக்களித்துள்ளனர்.

தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சட்ட மன்ற வாக்களிபபு நிலையத்தில் [illegible] இரண்டு [illegible] பதிவாகியுள்ளன.

## பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டன

(வண்ணார்பண்ணை)

வடக்கின் இன்றைய சூழ்நிலைகள், போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக வடபகுதியில் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போதனுசிரியைகளின் வசதியை முன்னிட்டுய் பயிற்சியாளர்களது பாதுகாப்பு வசதிகளை முன்னிட்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. மறு அறிவித்தல வரை இப்பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டிருக்குமென இது தொடர்பானவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட...

(1-ம் பக்க3ம்கலத்தொடர்ச்சி)

காலை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (நிர்வாகம்) திரு. எஸ். யோசேப், சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் (சுற்று வட்டாரம்) திரு. ஆர். சுந்தரலிங்கம், வடமாநில பிரதி பொலிஸ் மா அதிபர் டிறல் குணதிலகா, யாழ், அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் ஆகியோர் என்னை எனது வாசஸ்தலத்தில் 25-12-84 திகதியிடப்பட்டு திரு. சுந்தரலிங்கம் அவர்களுக்கு விலாசமிடப்பட்ட கீழ்க்காணும் கடிதம் சம்பந்தமாக சந்தித்தனர். அக்கடிதத்தின் தமிழாக்கம் பின்வருமாறு:

### அந்தக்கடிதம்

''திரு. ஆர். சுந்தரலிங்கம்
(சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்)
குற்றப்பிரிவு
ஸ்ரீலங்கா''

''டிசம்பர் 21ம் திகதி எம்மால் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களான திரு ரெறன்ஸ் சில்வாவும், திரு. ஜே ஏ ஆர். நாணயக்காரவும் எங்கள் பாதுகாப்பில் சுகமாகவும் நலமாகவும் இருக்கிறூர்கள். இவர்கள் இருவரும் உயிருடன் இருக்கிறூர்கள் என்பதைக் காட்டுவதற்கு இத்துடன் ஒரு விடியோ கசட்டை அனுப்புகின்றோம். இவர்களிருவரையும் உங்கட்கு மீட்கவிருப்பமானல் நீங்கள் ரூபா 50 லட்சம் பெறுமதியான தங்கத்தகடுகளைத் தர வேண்டும்.

''ஸ்ரீலங்கா அரசு இவ்விடயத்தை இரகசியமாகத் தீர்க்க விரும்பினல் நீங்கள் இதைச் செய்யலாம். நேரடியாக நாங்கள் உங்களுடன் இவ்விடயமாகத் தொடர்புகொள்ளமாட்டோம்.

''இதிற்காட்டப்பட்ட பணயத்தைக் கொடுக்க சம்மதமாயின் யாழ்ப்பாண கத்தோலிக்கஆயர் அவர்களை ரேடியோ மூலமும் ரி வி மூலமும் இவர்களை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கும்படி கேட்கவும் இது நீங்கள் பணயத்தைக் கொடுக்கச் சம்மதித்துள்ளீர் என்பதற்கு அறிகுறியாகும். நாளை 26-12-84 இரவு 9.00 மணியின் முன் உங்கள் பதிலை எதிர்பார்கின்றோம். எமது கோரிக்கைக்குச் சம்மதிக்கத் தவறினல் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுட்டுக்கொல்லப்படுவார்கள்.

(ஒப்பம்) 'இயக்கம்'
25-12-84

''இதுவிடயமாக முதலாவதாக: கடத்திச் சென்றவர்கள் யாராக இருந்தாலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் இற்றைவரை உயிருடன் வைத்திருப்பதற்கு பொறுப்பானவர்களுக்கு நான் நன்றிகூற விரும்புகிறேன். கடிதத்தில் கோரப்பட்டுள்ள பணயம் சம்பந்தமாக இக்கடத்தலுக்குப் பொறுப்பானவர்களுடனே அல்லது கோரப்பட்டுள்ள பணயத்துடனே எனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லையென்பதை நான் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

''ஆகையால் அறிக்கையின் காரணமாக அரசாங்கம் பணயத்தொகையை வழங்கச் சம்மதித்துள்ளது என்று எவ்விதத்திலும் கருத இடமில்லை.

இந்நிலையைமிகவும்தெளிவாக்கியுள்ள அதே நேரத்தில் இப்பொழுது நத்தார் பண்டிகைக் காலமான படியால் கிறீஸ்தவ கொள்கையின் பிரகாரமும் மனிதாபிமான அடிப்படையிலும் நிபந்தனைகள் எதுவும் இன்றி மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை விடுவிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.''

வ. தியோகுப்பிள்ளை,
(யாழ். ஆயர்)
26-12-84

### முள்ளிக்குள...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

பேரடங்கிய கோஷ்டி ஒன்று மீன் வாடிகளில் படுத்திருந்த 11 பேரை கடற்கரைக்கு அழைத்துச் சென்று ஆறு பேரை வரிசையில் நிறுத்தி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகவும், ஏனைய ஐந்து பேரையும் ஓடுப்படி கூறினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்
### ஐயாத்துரை

மட்டுவில் வடக்கு சிவன்கோவிலடியைச் சேர்ந்த ஐயாத்துரை நேற்றுக் காலமானர் அன்னர் காலஞ்சென்ற அருணுசலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், கண்மணியின் அன்புக்கணவரும், சரவணபவானந்தன் (பெரியானந்தம்), முத்தம்மா ஆகியோரின் தந்தையும், சின்னத்தம்பி (இளைப்பாறிய கிராமசேவையாளர்), கந்தையா, இர்ாமலிங்கம் சின்னம்மா, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், விசுவலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் மாமனரும், கவிதா, பிரதீபன், சயந்தன் ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூனறுமணிக்கு மட்டுவில் வடக்கில் நடைபெறும் உற்றூர் உறவினர் அனைவரும் இவ்வறிவிததலை ஏற்றுக்கொள்ளவும். 1114

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org